தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர்
சுலை இதழ்
விலை 20 காசு

பிறரைப் புகழ்கையில்
உனைத்தாழ்த் தாதே!
பிறரை ஆய்கையில்
உன்னையும் எடையிடு!
பிறரைப் பணிக்கையில்
நீயும் பணிபுரி!
பிறரை மகிழ்வுசெய்;
நீயும் மகிழ்ந்துகொள்!

குரல்: 3. இசை: 4-5.

பூனை

மியாவ் மியாவ் பூனை
மீசைக்காரப் பூனை!

கொட்டுக் காலுப் பூனை
கொள்ளிக் கண்ணுப் பூனை!

எட்டித்தாவி விரைவிலே
எலிபிடிக்கும் பூனை!

பண்டம் உருட்டும் பூனை
பாலைக்குடிக்கும் பூனை!

உண்டு விட்டு அடுப்பிலே
உறக்கம் கொள்ளும் பூனை!

மியாவ் மியாவ் பூனை
மீசைக் காரப் பூனை!

மின்சாரம்

விசையைத் தட்டி விட்டதும்
விளக்குப் பற்றிக் கொள்ளுமாம்!
விசையைத் திருப்பி வைத்ததும்
வாய்திறந்து பேசுமாம்!

விசையை முடுக்கி விட்டதும்
விசிறி நன்கு சுழலுமாம்!
விசையைக் காதில் வைத்ததும்
விளம்பும் பேச்சு கேட்குமாம்!

கம்பிக் குள்ளே செல்லுமாம்!
கையில் தொட்டால் கொல்லுமாம்!
தம்பி! அதுபேர் 'மின்சாரம்'
தண்ணீர் தந்த விசையாகும்!

பாடல்கள்: துரை-மாணிக்கம்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-3. | தி பி.௧௯௯௯-௨௦௦௦(நளி, சிலை) டிசம்பர் 68, சன-, 69 | இசை-4,5

அறிவுப் புரட்சி!

பள்ளியிற் குறும்பு செய்யாதே—உளப்
பான்மையை எப்போதும் குறைக்க எண்ணாதே!
பிள்ளைக ளோடொரு பிள்ளை—பின்
பிழைகள் நீ செய்வதில் நேர்மையொன் றில்லை! —1

தாழ்வும் உயர்வும் எண்ணாதே!—கல்வி
தரும் உயர் வொன்றைவிட் டெதையும் எண்ணாதே!
ஆழி நடுவினைப் போலக்—கற்று
அமைதிகொள்! இரையாதே கரைநீரைப் போல! —2

கணக்காயர் சொல்லை மதிப்பாய்—அவர்
கட்டளை கேட்(டு) அதைப் போல நடப்பாய்!
குணக்குன் றெனப்புகழ் நீசேர்!—பெருங்
குறும்பன் எனும்பெயர், கீழ்மைக்குச் சரிநேர்! —3

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

மற்றவர் பொருளை வவ்வாதே-உனை
மாளவைத் தாலும் பொய் சொல்ல ஒவ்வாதே!
கற்றவர் முன்னில் பேசாதே!-எனில்
கல்லாதார் தமைவிட்டு விலகக் கூசாதே! —4

"சாதி"யொன் றில்லையென் றெண்ணு-அதைச்
"சாத்திரம்" சொன்னாலும் நம்பாதே கண்ணு!
வீதிகள் கோணைகள் ஆயின்-அங்கு
வாழ்பவர் யாவரும் மாந்தரே என்பாய்! —5

ஏழையர்க் கென்றும் இரங்கு-அவர்
ஏழ்மைக்குக் காரணம் செல்வர் செருக்கு!
பிழையன் றோ ஏற்றத் தாழ்வு-மாந்தப்
பிள்ளைகள் யாவர்க்கும் பொதுவன்றோ வாழ்வு! —6

உடுப்பதும் உண்பதும் கொண்டே-நல்
உயர்வென்றும் தாழ்வென்றும் கற்பித்தார் பண்டே!
கொடுப்பதல் லால்உயர் வில்லை-செல்வக்
கூறுகள் சிலருக்கே உரிமையென் றில்லை! —7

பொதுமை நினைவை வளர்ப்பாய்-அதைப்
பூவுல கெங்கணும் பரப்ப முனைவாய்!
புதுமை விளைவுகள் செய்வாய்-உள்ளப்
புரட்சிக்கு அறிவென்னும் நன்னீரைப் பெய்வாய்! —8

நீர்பொது; நிலம்பொது தம்பி!-இந்த
நெறிமுறை பிழைபடல் பெருந்தீது தம்பி!
பார்பொது; பயன்பொது தம்பி!-நலம்
பாடு படுவோர்க்கே உரியது தம்பி! —9

பழங்கதை பேசிடு வோர்கள்-குலப்
பகுப்புகள் தம்மைப் புகுத்திடு வோர்கள்,
விழுங்கிடும் செல்வத் திருடர்-இன்ன
வீணர்எல் லாரையும் வீழ்த்துக தம்பி! —10

-பெருஞ்சித்திரன்.

கழுதை அழுத கதை.

-துரை. மாணிக்கம்-

—என்று கழுதை
இருவிழியும் நீர்வடிய
நின்றபடி தன் துயரை
நீள உரைத்ததுவே!

இத்துயரைக் கேட்ட
இளங்கழுதை தாயினிடம்
''செத்துவிட்ட தந்தை
சிவப்போ கறுப்போ''வென்(று)
ஏழைக் குரலிலே
கேட்டிடவும், ''என்போல்தான்
வாழைச் சருகு நிறம்!
வாடாத மேனி''-என்றே
அன்னைக் கழுதை
அதனிடத்துக் கூறியது.
முன்னால் இருந்தழுத
காளை முகந்தூக்கி

''என்னருமைத் தோழியே
ஏக்கத்தை விட்டுவிடு!
உன்னருமைக் காதலனை
எண்ணி உருகாதே!
என்னருமைத் தோழன்
ஒருவன் இருக்கின்றான்;
அன்னவன்பால் உன்னை
அறிமுகம்நான் செய்கின்றேன்;
உன்னை மணஞ்செய்ய
உள்ளம் இசைந்திடுவான்;
பொன்னைப்போல் வைத்திருப்பான்!
பூதம்போல் காத்திடுவான்!
தானுண்ண மாட்டான்;தன்
பங்கை உனக்களிப்பான்!
ஊனுயிரை வாழ்வை
உனக்கே உவந்தளிப்பான்
நல்ல மனமுடையான்;
நன்றாகப் பாடிடுவான்!

முல்லை நிறமூக்கு!
முட்டியிடாப் பின்கால்கள்!
மாரியம்மன் கோவிலிலே
நின்றிருக்கும் மண்குதிரை
நேரில்வந்து நிற்பதுபோல்
நிற்குமவன் நீண்டவுடல்!

முட்டைக்குக் கூனு
முதுகவனின் வல்முதுகு!
பேட்டைக்கும் ஆற்றுக்கும்
பத்துமுறை போய்வருவான்!
கோட்டைக் கழுதைகளை
எல்லாம் ஒருங்கிணைத்துக்
கூட்டமொன்று போட்டுக்
"கழுதைக் கழகமொன்றைத்
தோற்றுவித் துள்ளான்! —என்
தோழனெனில் கண்டுகொள்ளேன்!
ஆற்றுப் படுகைக்
கருகிருக்குங் குப்பத்துச்
சின்னான் ஏ காலி
சிதம்பரம்போய் வாங்கிவந்த
'பொன்னான்' எனுங்கழுதை
'பூவாய்'க்குத் தந்தமகன்!

"பேர்கேட்டால் நீவியப்பாய்!
"வேங்கை" பெரும்பேர்தான்!
ஆர்ப்பாட்டப் பேர்வழிதான்!
ஆனாலும் கொள்ளை அன்பு!
வரைக்குமவன்
எக்கழுதைப் பெண்ணையும்
நின்றும் அரைக்கண்ணால்
நேர்க்குநேர் பார்த்ததில்லை!
ஒன்றுமட்டும் உண்மை; அவன்
உன்னை விரும்பிடுவான்!
இன்றுனக்கு நல்லநாள்!
என்பின்வா"—என்றதுவே!

—தொடரும்.

பெரியோர் கதை!

சியார்சு பெர்னார்டுசா.

–நீடாமங்கலம், இளமுருகன்

செந்தமிழ்ச் சிட்டுகளே! தம்பிகளே! தங்கைகளே! உலகில் மாந்த வாழ்வியல் நெறியினைச் செம்மைப்படுத்த முயன்ற அறிஞர் பலர். அவர்களுள் 'அயர்லாந்து' நாட்டில் தோன்றிய சார்சு பெர்னார்டுசா குறிப்பிடத்தக்கவர். இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த நாடகாசிரியராகவும் பேரறிஞராகவும் போற்றப்படுபவர். தளரா முயற்சியும் தன்னம்பிக்கையும், துணிவும், மனத்தெளிவும், நேர்மையும் ஒருங்கிணைந்த வியப்பான பெருமகனார் அவர்.

'சா' அயர்லாந்து நாட்டில் 'டப்ளின்' நகரில் 1856-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 26-ஆம் நாள் ஏழ்மையான பெற்றோருக்கு மகவாகத் தோன்றினார். இவர் தந்தை வரவுக்கு மீறிச் செலவு செய்து வரம்பு கடந்த வாழ்வுநடாத்தியவர். அன்னையார் நுண்கலைகளில் நல்ல புலமையுடையவர். ஏழ்மையையும் பொருட்படுத்தாது பெற்றோர் 'சா'வைப் பள்ளிக்கு அனுப்பினர். ஆனால் பல கட்டுப்பாடுகளுடன் கூடிய பள்ளிப்படிப்பால் 'சா' மிகுந்த பயன்பெறவில்லை. எனவே 1871-ஆம் ஆண்டு ஒருவாறாகப் பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு ஒரு தொழில் நிறுவனத்தில் குறைந்த ஊதியத்தில் எழுத்தர் பணியிலமர்ந்தார். ஏறத்தாழ ஐந்தாண்டுக்காலம் விருப்பின்றியே அப்பணியைத்தொடர்ந்தார். அந்நாட்களில் தமது அன்னையிடமிருந்து இசை நுணுக்கங்களைக் கற்றார். எண்ணிலடங்கா நூல்களைக் கற்றுத் தமது அறிவைக் கூர்மையாக்கிக் கொண்டார்.

1876-ஆம் ஆண்டு தமது தாயாருடன் 'சா' இலண்டன் மாநகரை அடைந்தார். 1885-ஆம் ஆண்டு ஈறாக ஒன்பது ஆண்டுக் காலம் சில தாளிகைகளின் இலக்கிய, இசை, கலைத்துறைகளின் திறனாய்வாளராகப் பணியாற்றினார். இதன் மூலம் இவர் மிகவும் குறைந்த

வருவாயே பெற்றார். 1881-ஆம் ஆண்டு கொடிய அம்மை நோய் இவரைத் தாக்கி முகத்தில் வடுக்களைத் தோற்றுவித்தது. அவற்றை மறைக்க இவர் தாடிவளர்க்க நேரிட்டது. பின்னர் இறுதிநாள் வரை தாடியுடனேயே விளங்கினார். 1885-ஆம் ஆண்டு "மனைவி இழந்தவர்களின் வீடு" எனும் தமது முதல் நாடகத்தை வெளியிட்டார். மேல் மட்ட மக்களது கீழ்மைச் செயல்களை உள்ளது உள்ளவாறே காட்டியதால் இந் நாடகத்திற்குப் போதிய பாராட்டுகள் கிடைக்கவில்லை. எனினும் 'சா' தமது குறிக்கோளிலிருந்து மாறுபடாமல் "பெண்களைச் சுற்றுபவன்" "திருவாட்டி வாரனின் தொழில்" போன்ற நாடகங்களை எழுதி அற்றைநாள் குமுகாயத்தினைப் படம்பிடித்துக் காட்டினார். பின்னும் பல நாடகங்களைத் தமது மனம் தளராமல் புதுமைக் கருத்துகளுடன் வெளியிட்டுக் கொண்டிருந்தார். 1904-ஆம் ஆண்டு வாக்கில் இவரது முயற்சி வெற்றிபெற்றது. இவரைத் தூற்றியோரெல்லாரும் போற்றத் தலைப்பட்டனர் பெருங்குடி மக்களும் அமைச்சர்களும் பிறரும் இவர் நாடகங்களைப் பெருவிருப்புடன் காணத் தலைப்பட்டனர். புகழ் என்னும் ஏணியில் இவர் மிகவிரைவாக ஏறத் தொடங்கினார். 1922-ஆம் ஆண்டு இவர் எழுதிய "திரும்பவும் மெதுசாலாவுக்கே" எனும் நாடகமே தாம் எழுதிய நாடகங்களுக்குள் சிறந்ததென இவர் கருதுகின்றார். இவர் எழுதிய "பிக்மேலியன்" எனும் நாடகம் திரைப்படமாக்கப் பட்டதன் விளைவாக 1929-ஆம் ஆண்டில் இவருக்கு 3,86,570 உருபா கிடைத்தது இதே நாடகம் "மை ஃபேர் லேடி" எனும் பெயரில் இலண்டன் மாநகரில் தொடர்ந்து ஐந்தரை ஆண்டுக் காலம் நடைபெற்றது, அடி நாட்களில் ஏழ்மையில் உழன்ற 'சா' தமது இறுதி நாட்களில் ஐம்பது இலக்க உருபா உடைய பெரும் பொருட் செல்வராய் விளங்கினார். எனினும் தமது வாழ்வை எளிய செலவிலேயே நடாத்தினார். 1925 ஆம் ஆண்டு இலக்கியப் பணிக்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. அதன்மூலம் தமக்குக் கிடைத்த இரண்டு இலக்க உருபாவையும் அறப்பணிக்கே செலவிட்டார். 1950-ஆம் ஆண்டில் தமது தொண்ணூற்று நான்காம் அகவையில் உயிர் நீத்தார்.

இளமையில் வறுமையுடன் வாழ்ந்ததால் குமுகாய வாழ்வியலை நன்கு தெளிந்திருந்தார். இவர் தந்தை கார்சா பெருங்குடிகாரர். கார்சாவிடம் இவர் கண்ட குறைகள் தமது வாழ்வில் புகா வண்ணம் உடுத்து விட்டார். அடிநாள் முதல் கடைநாள் வரை கள்ளுண்ணு

மலும் புலால் மறுத்தும் தம்மை அற நெறிப் படுத்திக் கொண்டார். மனச் சான்றிற்கு மதிப்பளித்து வாழ்வின் பல திருப்பங்களிலும் தமது நெறி தவறுது வாழ்ந்த இவர் சிறந்த சொல்லாற்றல் பெற்றவர். தவறெனப் பட்டதைத் துணிவுடன் சாடுவார். "கோயில்களுக்குச் சென்று வழிபடுதலால் மட்டும் இறைவனைக்காண இயலாது. புற உலகில் எவ்வுயிர்க்கும் அன்பு செய்தலாலே மட்டும் இறைவனைக் காணலாம்" எனக்கூறி இறைமையை அன்பு வடிவத்தில் கண்டவர். "பழமை எனும் ஒரே காரணியம் பற்றி எதற்கும் சிறப்பளிக்கும் பழக்கம் ஒழிய வேண்டும்" என்னும் புதுமை நோக்கங் கொண்டவர். "சிரித்தலையும் அழுதலையும் விடுத்து மாந்தன் எண்ணத் தலைப்பட வேண்டும்" எனும் நோக்கங் கொண்டவர். இவரின் நாடகங்களில் நகைச்சுவை நடமிடும் "அரைமணி நேரமும் ஒரு கற்பலகையும் கொடுத்தால் என்னுல் ஒருகணித வினுவிற்குத் தவருன விடையினைத் தர இயலும்" எனத் தமது கணித அறிவினைப் பற்றி நகைச் சுவையாகக் குறிப்பிடுகின்றுர் தமது உள்ளப் பாங்கிலேயே தமது நாடகங்களைக் கற்போர் அணுக வேண்டுமென்ற எண்ணத்துடன் தெளிந்த நீண்ட முன்னுரைகள் எழுதும் வழக்கங் கொண்டவர்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த இப் பெரியாரைப் பலர் பலவாருகப் புகழ்ந்திருக்கின்றனர். இவ்வண்ணம் கற்ருேராலும் மற்ருேராலும் புகழப் பெறும் சிறந்த ஆளுமையைப் பெற்ற இப் பேரறிஞரிடம் பொருளுணர்வதில் நுண்மையையும், தவறைச் சுட்டுவதில் திண்மையையும், தடையற்ற நகைச் சுவையுடன் கூடிய எழுத்து வன்மையையும் உண்மைக்கு உயர்வளித்த உள்ளத் தெளிவையும், மனச் சான்றிற்கு மாறுபடா மாண்பினையும், தோல்வி கண்டஞ்சா நெஞ்சுரத்தையும், அன்பில் இறைமையைக் கண்ட மேன்மையையும் நாம் காணலாம். அவற்றைப் பின்பற்றி உயர்வடையலாம். 0

நாட்டு விடுதலை

இந்தியத் துணைக்கண்டம் 1947-ஆம் ஆண்டு விடுதலை பெற்றது. பிற நாடுகள் விடுதலையடைந்த ஆண்டுகளைக் கீழே காண்க.

பொலிவியா—1824.
பிரேசில் — 1882 (குடியரசானது 1889-ஆம் ஆண்டு)
கிரீசு — 1829
பெல்சியம் — 1830
தென்னமெரிக்கக் குடியேற்ற நாடுகள் — 1819
சீனக்குடியரசு — 1912
பாகி:ச்தான் — 1947.

பயன்மொழிகள்.

0 ஒருவர் தம்மைப் பற்றித்தாமே எழுதுவது நல்லது, ஆனால் கடினம்; தம்மை இகழ்ந்து எழுதுவதென்றால் தம் மனம் நோகும்: தம்மைப் புகழ்ந்து எழுதினாலோ படிப்பவர் செவிக்குப் புளிக்கும்!

—அபிரகாம் கௌலி.

0 பலர்மேல் அமர்ந்ததும் தேனீக்கள் பாட்டை நிறுத்துகின்றன. அதுபோல் பதவியில் அமர்ந்ததும் ஊமையாகின்றனர் அரசியல்காரர்கள்.

—தாமசு மூர்.

0 வாளால் உறைதேய்ந்து போகிறது! உயிரால் உடல் நலிந்து போகிறது.

—பைரன்.

0 நாம் பணிசெய்யப் பணிக்கப்படுகின்றோம். ஆனால் நப்பணியை நாம் முடிக்கக் கொடுத்துவைக்கவில்லை.

—டால்மட்.

0 நான் படிக்காத புத்தகத்தை எனக்குக் கொண்டு தருபவன்தான் என் சிறந்த நண்பன்.

—ஆபிரகாம் இலிங்கன்.

0 ஒருவன் வாய்ப்பேச்சைக்காட்டிலும் அவனது அமைதி உண்மை எண்ணங்களை வெளிப்படுத்தும்.

—சேக்சுபியர்.

0 உங்களுடைய கல்வி, தூய்மை, உண்மை என்ற வலிவான அடிவாரத்தில் கட்டப் பெறுதல் வேண்டும்.

—காந்தியடிகள்.

0 ஒரு நாட்டின் மேன்மையும் தாழ்மையும் அந்நாட்டின் இளைஞர்களிடத்தில் தாமிருக்கின்றன.

—சுபாசு சந்திர போசு.

0 மானத்திற்காக எதையும் இழக்கலாம்—ஆனால் எதற்காகவும் மானத்தை இழக்கக் கூடாது.

—காந்தியடிகள்.

0 நம் ஆவல்தான் நம் எண்ணத்திற்குத் தந்தை! —சேக்சுபியர்.

0 அறிவு படைத்ததன் முடிவான நோக்கம் ஒழுக்கத்தை வளர்ப்பதே யாகும்.

—காந்தி.

0 காலத்தாழ்வை மன்னிப்பதில் எனக்கு ஆர்வமில்லை; ஆனால் செய்து முடிக்கப்பட்ட செயல்கள் என்ன என்பதிலேதான் ஆர்வம் மிகுதி

—நேரு.

0 வீட்டுலகம் என்பது உன் தாயின் காலடியில் தானுள்ளது.

—நெப்போலியன்.

தொகுப்பு:— அரியநகர்-பி. இலூயிசு.

தெரிந்து கொள்ளுங்கள்

- உலகின் மிகப் பழைய செய்தித்தாள் 'பீகிங்' நகரிலிருந்து வெளிவரும் சிங்-பாவோ என்ற அரசினர் செய்தித் தாள்தான். இச்செய்தித்தாள் 1030 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளி வருகின்றது. அச்சுப்பொறிகள் கண்டுபிடிக்கப்படுமுன் இதனைக் கையால் எழுதிப் போலிகை (நகல்) எடுத்தார்கள். தொடக்க இதழ் முதல் இச்செய்தித் தாள்கள் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

- நாம் நிலவினைத் தண்ணிலவு (குளிர்ந்தநிலவு) எனக் கூறுகின்றோம். சூரியனை வெம்மை மிக்கது என்ற பொருளில் வெய்யவன் என்கின்றோம். அத்தகு சூரியனின் ஒளி 30,000- இல் ஒரு பகுதிதான் நிலவின் ஒளி.

- ஒரு கப்பல் மேற்கு நோக்கிச் செல்லுங்கால் உள்ள எடையை விட அக்கப்பல் கிழக்கு நோக்கிச் செல்லுங்கால் எடை குறைவாக இருக்கும். நில உலகானது கிழக்கு முகமாகச் சுற்றுவதே இவ்வெடைக் குறைக்குக் கரணியமாகும்.

- ஒளியத்தின் (RADIUM) ஒளிக்கதிர்கள் எத்தகைய கடினமான பொருள்களையும் ஊடுருவக் கூடியவை. இத்தகு ஒளியத்திற்கு வேறுபல ஆற்றல்கள் உண்டு. இவ்வொளியம் நீரினைப் பிரிக்கும். கண்ணாடியை நிறமுடையதாக மாற்றும். வளையும் இழுப்பானை (Rubber) ஒடியும் பொருளாக மாற்றும். வைரங்களைப் பல நிறமுடையனவாக ஒளிவீசச் செய்யும்.

- இதுவரை எடுக்கப்பட்டுள்ள முத்துகளில் உலகின் மிகப் பெரியமுத்து 1888 தவச எடையுடையது. ஐந்து தவச எடையுடைய முத்தின் விலை ஏறத்தாழ 1220 உருபாக்களாகும்.

- இப்பொழுது ஆங்கில ஆண்டு சனவரித் திங்கள் முதல்நாளில் தொடங்குகின்றதல்லவா? இம் முறை 1752-இல் இருந்துதான் வழக்கிற்கு வந்தது.

- உருபா தாள்கள் அனைத்தையும் வெளியிடுவது இரிசர்வு-காசகம் (Reserve bank) தான். ஒருருபா தாள் மட்டுமே அரசினரால் அச்சிடப்பட்டு பொருள்துறைச் செயலரின் கை ஒப்பத்துடன் வெளியிடப் படுகின்றது. மற்ற உருபா தாள்

களில் இரிசர்வு காசகத்தின் ஆளுநருடைய கையொப்பமே இருக்கும்.

0 அமெரிக்க நாட்டின் வாசிங்டன் ஏரி மிக ஆழமானதாகும். இதன் அடியிலிருந்து தூண்கள் எழுப்பிப் பாலம் அமைத்தல் என்பது மிகக்கடினமானதும் மிகுந்த செலவுடையதும் ஆகும். எனவே இவ்வேரி நீரில் ''மிதக்கும் பாலம்'' கட்டப்பட்டுள்ளது. இப்பாலம் முழுதும் ''கான்க்ரீட்'' என்னும் கற்காரைக் கலவையினாலானது.

0 இலண்டன் மாநகர் உலகின் மிகப் பெரு நகர்களில் ஒன்று. இந்நகரில் அஞ்சல்களைக் கொண்டு செல்வதற்கென நிலத்தின் அடியில் தனித் தொடர்வண்டிகள் செல்கின்றன. இம்முறை உலகின் எந்நகரிலும் இல்லையெனலாம். இவ் வண்டித்தொடர் 1926-ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படுகின்றது. ஓட்டுநர் (Driver) இல்லாமலேயே இவ் வண்டிவேலைசெய்தல் மற்றொரு வியக்கத்தகு செய்தியாகும்.

0 மின் ஏதத்தினால் தீ பரவும்போது நீரினையூற்றித் தீயை அணைக்க முயலுதல் கூடாது. அது தீயினைப் பரவவே வகை செய்யும், மணலைக் கொட்டியே அக்கால் தீயை அணைக்க வேண்டும்.

(தொகுப்பு:— சி. தமிழ்வென்றி, ம, தி. தா. இந்துக்கல்லூரி' நெல்லை–ச)

தமிழ்ச்சிட்டு கடலூர்-1.

தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

	உள்நாடு.	வெளிநாடு, கொழும்பு
ஆண்டுக் கட்டணம் உருபா.	2-50	4-00
தனியிதழ் ,,	0-20	0-30

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு 40 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

இருண்டவீடு

மூலக்கதை:- பாவேந்தர் பாரதிதாசன்.
நாடக ஆக்கம்:- கு. ஐந்தெழுத்தன்.

காட்சி-20

தலைவர்:- (மேலுந் தொடர்ந்து) இந்தாடீ, என்னை என்னடி நினைச்சே! பந்தாடி விடறேன், பார்! (பல்லைக்கடித்து, கண்களை உருட்டிப் பார்க்கிறார். கொல்லைப்புறம் சென்று கோல்தேடி மீள்கிறார். மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டு, துண்டை உதறித் தோளில் போடுகிறார். குடுமியைக் கோதிமுடித்து, கடுக்கனைத் துடைத்துவிட்டுக்கொண்டு புறப்படுகிறார்.) அடியே! இனிமேல் நான் சாப்பிடமாட்டேன்! கணநேரம் இங்கே இருக்கவும் மாட்டேன்! யாராவது என்னைக் கூப்பிட வந்தா கொன்று போட்டிடுவேன். (சங்கிலியைப் பார்த்து) சங்கிலி, இனிமேல் இங்கே இருக்க எனக்குப் பிடிக்கலே; மாடு கன்றுகளைக் கருத்தாப் பார்த்துக்கொள்! குழந்தையையும் உன்கிட்டதான் ஒப்படைக்கிறேன். நான் செட்டித் தெருவிலே, தென்னைமரத்தை ஒட்டினாப்போலே இருக்கிற வீட்டுக்குப் பக்கத்திலே ஒரு குட்டிச்சுவரு இருக்கிறதே, அதன் கோடியில் இருக்கிற இருசன் வீட்டுக்கு எதிர் வீட்டிலே இருப்பேன். நீ அங்கே வந்து கிந்து கூப்பிடப்போறே! அந்த வீட்டு எண் அறுபத்திரண்டு; தெருப் பக்கத்து அறையில்தான் இருப்பேன். ஆனா நீ கூப்பிட்டா வரவே மாட்டேன்.

[இரைச்சல் போட்டுக் கொண்டே போகிறார். நடைவரைக்கும் சென்று திரும்புகிறார். யாரும் அழைக்காமையால், மீண்டுபோய்த் தெருவோடே நடக்கிறார்.]

காட்சி-21

சங்கிலி:- (தலைவியைப் பார்த்து) என்னம்மா? உங்க கணவர் பொன்னானவராச்சே! அவருகிட்டே இப்படியெல்லாம் பேசி எரிச்சல் உண்டாக்கலாமா? தப்பு இல்லையா?

தலைவி:- சரிதான், போதும். வாயை மூடிக்கொண்டு உட்கார். அவர் என்ன, மாந்தரா? மலைக்குரங்கா? கோணங்கிபோலில்லே,

கொக்கரிக்கிறாரு! ஆணுப் பொறந்தா அமரிக்கையாய் இருக்கணும். ஆனா இவருகிட்ட அடக்கம் கொஞ்சங்கூட இல்லையே! இவரைப்போல ஓர் ஆளை நான் எங்கேயும் பாத்ததில்லை! கல்லா, சுவரா; சொல்றதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க! மூச்சு விட்டால்கூட "ஆச்சா"ன்னு அதட்டறாரு! சீச்சீ, இவர் ஒரு சின்னநடத்தைக்காரரு!

சரி, அதுகிடக்குது; போய், சோறுபோடு'

காட்சி–22

[பெரிய பையனுக்குச் சிறிது நோய் தணிந்திருந்ததால், அவனுக்கும் தலைவிக்கும் உணவு படைக்கிறார்கள். தலைவியும் பையனும் உணவுகொள்ள விரைந்து செல்கையில், வழியிலிருந்த மண்ணெய்ப் புட்டியை இடறித் தள்ளிவிடுகின்றனர். அதனால் கீழே சிந்திய மண்ணெய்யைக் கையால் வழித்துப் புட்டியில் ஊற்றிவிட்டு, வழக்கப் படியே கையைக் கழுவாமல் சமையற்கட்டினுள் வந்து அமர்கின்றனர். சோறும், குழம்பும், சாறும் சுவையாய் அமைந்திருந்தும், அவற்றில் அவர்கட்குச் சுவைக்குறைவு தோன்றுகிறது. வீட்டுத் தலைவி சங்கிலியைத் திட்டுகிறாள். தன்னால் ஏதும் தவறில்லை என்று சங்கிலி உரைக்கிறாள்; உணவு முடிந்ததும், எஞ்சிய காய்கறிகளையும், சோற்றையும் வேலைக்காரிகள் வீட்டுக்கு எடுத்துச் செல்கின்றனர்.

காட்சி–23

[பெரியபையன் அழுக்குத் தலையணையைத் தலைக்கு வைத்துக் கொண்டு, மூகட்டுப்பூச்சி கடிப்பதையும் உணராமல், குறட்டை யொலியுடன் உறங்கிக் கொண்டிருக்கிறான்.]

[கைக்குழந்தையின் பக்கத்தில் படுத்திருக்கிறாள் தாய். கறவை அலறுகிறது. 'ஓ! வைக்கோல்போட மறந்தேனே!' எனக் கூறிக் கொண்டே எழுந்து சென்று, வைக்கோல் தேடிப் போட்டுவிட்டு வந்து, பெரியபையனுக்கும் கைக்குழந்தைக்கும் இடையே படுக்கிறாள். தெருவில் நாய் குறைக்கிறது. எழுந்து சென்று, தெருக்கதவைத் தாழிட்டு வந்து, படுக்கையில் விழுந்து புரள்கிறாள்.

காட்சி–24

[இரவு பத்துமணி, எண்ணெய் இல்லாமையால் விளக்குகள் அணைந்தன. இருண்ட வீடாகக் காட்சி அளிக்கிறது. அவ்வில்லறம் குழந்தையைத் தவிர, மற்றவர்கள் உறங்கிவிட்டனர்.]

[தலைவர் திரும்புகிறார்; வாயிலில் நாய் வரவேற்பளிக்கிறது. வீடு மூடியிருப்பது கண்டு கனைக்கிறார், மனைவி வந்து கதவைத் திறப்பாள் என்ற எண்ணத்தில். மனைவி வரவில்லை. விரலால் கதவை மெல்லத் தட்டுகிறார். பிறகு சற்று வலிவாகத் தட்டுகிறார்; பின்னர் உள்ளங் கையால் தட்டுகிறார்; பயனில்லை. ஆகையால், அடிக்கிறார் இடிக் கிறார், எட்டி உதைக்கிறார்—எப்படி யெல்லாமோ முட்டிப் பார்க்கிறார். கதவு திறக்கப்படவில்லை.]

காட்சி–25

அண்டை வீட்டுக்காரர்கள்:– (கடுமையான ஓசையைக் கேட்டு மனம் பொருமல், தலைவரைச் சூழ்ந்துநின்று, பெருஞ்சினத்துடன்) என்னங்காணும்! உமக்கு மூளையிலே ஏதாவது இருக்குதா? இந்த நேரத்திலே, தச்சுப் பட்டறையிலே தட்டுகிறது போலவா கதவைத் தட்டுவாங்க. உள்ளே யாராவது இருந் தால் வந்து திறக்க மாட்டாங்களா? கொள்ளு தின்கிற குதிரைகளா, அவர்கள்?

தலைவர்:– அதெல்லாம் ஒன்றும் இல்லைங்க. கதவு கொஞ்சம் பருமன். அதனாலே, நான் தட்டுகிறது உள்ளே கேட்காமல் இருக்க லாம்.

அண்டை வீட்டுக்காரர்கள்:– நல்ல ஆளையா நீர்! கதவை உடைக்க மனம் வைச்சுட்டீர்! சரி நடத்தும். (சிரிப்புடன் செல் கின்றனர்.)

காட்சி–26

(தலைவர் தொடர்ந்து கதவை யிடிக்கிறார். இரவு மணி பன்னி ரண்டு. உறங்கும் தலைவியின் சிறு விரலைக் கடித்த திருட்டு எலி, அவளது பெருவிரலையும் கடிக்கிறது. வலி தாங்காமல் விழித்துக் கொண்ட தலைவி, கதவு இடிக்கப்படும் ஓசை கேட்டு, மெல்ல நடந்து சென்று, கதவைத் திறந்துவிட்டு வந்து, முக்காடிட்ட தலையுடன், காலை நீட்டிப் படுத்து விடுகிறாள்.)

[தலைவர் விளக்கை ஏற்றி, தம் மனைவி விழித்துக் கொண்டே படுத்துப் புரள்வதையும், பெரிய பையன் ஆழ்ந்த உறக்கத்தில் இருப் பதையும் பார்க்கிறார்.]

தலைவர்:- ஏனடா தம்பி, சாப்பாடு கீப்பாடு ஏதாவது இருக்குதா? உணவுக் கடையெல்லாம் மூடியாய் விட்டது. போய்ப் பார்த்து விட்டுத்தான் வரேன்! (மறுமொழி இல்லாமையால் சினம் மிகுந்தவராய்) என்னடா ஒருத்தரும் பேசலே! அத்தனைப் பேரும் அழிஞ்சாப் போனீங்க! ஒருவர் தப்பாம ஒழிஞ்சாப் போனீங்க. (கூச்சலிட்டுக் கொண்டே சமையல் அறையில் விளக்குடன் நுழைகிறார்.)

காட்சி-27.

[பாண்டங்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்க்கிறார். சோற்றுப் பானை துடைக்கப்பட்டுக் கிடக்கிறது. குழம்புச் சட்டி கழுவப்பட்டுள்ளது. எதிலும் உணவு இல்லை. சீற்றம் கொண்டு பொரியற் சட்டியைப் போட்டு உடைக்கிறார். எண்ணெய்ச் சட்டியை எடுத்துக் கவிழ்க்கிறார். வெண்ணெய்த் தாழியை எற்றித் தள்ளுகிறார்.

பசியோ வயிற்றைக் கிள்ளுகிறது. பாண்டங்களை அப்படியே போட்டு விட்டுக் கூடத்தில் வந்து குந்துகிறார். என்ன செய்தாலும் எதுவும் நடவாது என்பதைப் புரிந்து கொண்டு 'இனி இந்த வீட்டில் சாப்பிட மாட்டேன்; உறுதி இது!' என்று கூறிக் கொண்டே வந்து படுக்கையில் சாய்கிறார்.]

(அடுத்த இதழில் முடியும்)

பொது அறிவுப் புதிர்கள்

க) நம் நாட்டில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அளிக்கும் வழக்கம் எப்பொழுது முதல் கையாளப் படுகிறது?

உ) பழங்களைச் செயற்கையாகப் பழுக்கச் செய்யப் பயன்படும் வேதியல் பொருள் எது?

ங) இழுப்பான் அல்லது அழிப்பான் (Rubber), தோல் போன்றவை எதில் கரையும்?

ச) சில சமையங்களில் பகலில் நிலவுபோல் தோற்றமளிக்கும் கோள் எது?

ரு) தம் கண்ணால் பார்ப்பதோடு கேட்கவும் ஆற்றல் பெற்றுள்ள உயிரி எது?

விடைகள்:- க) கி. பி. 1843 முதல் ஆங்கிலேயர் புகுத்தினர்.
உ) 'அதிலின்' பயன் படுகின்றது. (ங) "பென்சீனில்" கரையும்.
ச) வெள்ளி என்ற கோள் (ரு) ஆமை. — (சி. தமிழ் வென்றி)

வளரும் குழந்தை ....!

○ (அன்னையின் கருவில்) வளர்கின்ற குழந்தையின் கண்கள் தாம் முதன் முதலில் கருவில் உருவாகின்றன. தொடக்கத்தில் அவை இரண்டு குழிகள் போலத் தோன்றும்.

□ கருப்பத்தில் இருக்கும் போது குழந்தை மூச்சை உள்ளிழுத்து வெளிவிடுவதில்லை. பிறந்து சில நொடிகளுக்குப் பிறகே அது காற்றை உள்ளிழுத்து வெளியிடத் தொடங்கும்.

△ பிறப்பதற்கு எட்டுத் திங்கள்களுக்கு முன்பே கருவில்வளரும் குழந்தை தனக்கு வேண்டிய அரத்தத்தைத்தானே தோற்றுவித்துக் கொள்ளத் தொடங்கி விடுகின்றது.

□ பிறக்கும் முன்பே குழந்தையின் நெஞ்சு துடிக்கத் தொடங்கி விடுகின்றது.

□ குழந்தை வளரத் தாயின் உடல் தனக்குத் தேவையற்ற உறுப்புகளுக்குக் கொண்டுசெல்லும் (செலவிடும்) உணவுச் சாரத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக் கொள்கிறது. அப்படிப்பட்ட உறுப்புகளில் தலை முடியும்ஒன்று. அதனாலேயே சேயை ஈன்ற தாயின் முடி உதிர்கிறது.

△ குழந்தை அன்னையின் வயிற்றில் மூன்று கிழமையே முதிர்ந்த கருவாக இருக்கும்போது சிறிய வாலினை உடையதாகவிருக்கும். குழந்தை வளர, வளர, வால் உடலுக்குள்ளேயே மறைந்து விடுகின்றது.

□ இளமைப்பருவம் ஏழு அகவை வரைதான் இருக்கும். அதன் பின் உடலின் ஒவ்வோர் உறுப்பும் பையப் பைய ஒவ்வொரு காலத்தில் முதுமை யடைத் தொடங்கும்.

△ நம் உடலின் ஒவ்வோர் உறுப்பின் ஒவ்வொரு பகுதியும் மீண்டும் வளரக்கூடிய தன்மையுடையவை. ஆயின் அவ்வப் பகுதிகள் மேற்கண்டவாறு முதுமையடைவதால் அவ்வப் பகுதிகள் குறைப்படும் போது மீண்டும் வளரும் ஆற்றலை இழந்து விடுகின்றன. எனவேதான் குழந்தையின் காயங்கள் விரைவில் ஆறிவிடுகின்றன; முதியவர்களின் உடல் அவ்வாற்றலை இழந்து விடுவதால் முதியவர்களுக்கு

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

புதிர்....?

சென்ற மாதப் புதிர்களுக்கான விடை.

புதிர் 1. பரிசுச் சீட்டின் எண் : 727363.

புதிர் 2: 4 பெண்கள்; 3 பையன்கள்.

இம்மாதப் புதிர் :

வானூர்தி ஒன்று புறப்பட வேண்டிய நேரம் காலை 7 மணி 14 நிமையம். அன்று நான் வானூர்தி நிலையத்தை அடைந்த போது அதுகிளம்பிச் சென்று விட்டதாக அறிந்தேன். நான் போன நேரத்திற்குச் சரியாக $6\frac{1}{2}$ நிமையங்களுக்கு முன்னால் அங்குப்போயிருந்தால், $3\frac{1}{2}$ நிமையங்கள் காலந்தாழ்ந்து கிளம்பிய அந்த வானூர்தியை நான் பிடித்திருக்க முடியும். அப்படியானால் நான் வானூர்தி நிலையத்திற்குச் சென்ற போது நேரம் என்ன?

இப்புதிரை எழுதி விடுத்தவர்: ந. இராசேந்திரன்,
மாணவர் இலக்கிய மன்றச் செயலாளர்,
அரசினர் உயர் நிலைப்பள்ளி, இலால்குடி.

விடை அடுத்த இதழில்!

(முன் பக்கத் தொடர்ச்சி)

உடலில் காயமேற்பட்டால் அது விரைவில் ஆறுவதில்லை. சில பொழுதுகளில் நலமடையாமல் உயிர்க்கிறுதி பயப்பதும் உண்டு.

☐ உயிர்ச்சாரம் ' சி ' உடலில் மிகுதியாகச் சேர்வதால் இளமை வெகுநாள் காக்கப்படலாம். தக்காளிப் பழத்தில் இச்சாரம் உள்ளது.

☐ பொதுவாக 35 அகவை முதிர்ந்த பெண்களுக்கே இரட்டைக் குழந்தைகள் பிறக்கும்.

(சி. தமிழ் வென்றி)
(பேட்டை,)

சமசுகிருதத்தில் தமிழ்ச் சொற்கள்.

(பட்டியல்-1.)

தமிழ்	சமசு(வ. மொழி)	தமிழ்	சமசு(வ. மொழி)
அக்கம்-(1/12காசு)	அர்க்கா	அரத்தம்(அரக்கு)	அலக்த(ஸ்)
அக்கம்(உருத்திராக்கம்)	அக்ஷ	அரத்தன் (செவ்வாய்)	ரக்த
அக்கை	அக்கா	அரன்	ஹர
அகவு	ஹவே	அரி(சிங்கம்)	ஹரி
அகில்	அகரு	அருக்கம்(அழித்தல்)	அர்க்க.
அங்கணம்(சாலகம், சாய்கடை)	அங்கண	அருணம்(சிவப்பு)	அருண,
		அருந்து(உண்)	அத்
அங்கதம்(தோள் வளை வி)	அங்கத	அலப்பு	லப்
அச்ச(குறுக்கு)	அக்ஷ	அவை	சபா
அசை(உண்ணுதல்)	அச்	அளகம்(பெண் மயிர்)	அலக
அட்டம்(சமைத்த உணவு)	அட்டம் (வேக வைத்த்அரிசி)	அளி(தேனீ)	அலி
		அள்(நண்டு,தேள்)	அல
அட்டம்(உயரம்)	அட்டம்	அனல்	அனல
அட்டாலை	அட்டால	ஆகவம்(அறை கூவல், போர்)	ஆஹவ
அடக்கம்(ஒருவகை தோற்கருவி)	டக்கா(dh)	ஆடு	ஏட
அத்தம்(ஆளில்லாக் காட்டுவழி)	அத்வன் (வழி)	மேழம் } மேடம் }	மேஷ மேஷிகா
அதி—மிகுதி	அதி(adhi)	ஏடகம்	ஏடக
அதிகாரம்	அதிகார	ஏடு	ஏட
அதிகாரி	அதிகாரின்	ஆடாதோடை	ஆட்டாருஷ
அந்த!(அந்தோ!)	ஹந்த!	ஆணவம்(செருக்கு)	ஆணவ
அந்தி } சந்தி } (நெருங்குதல்)	சந்தி.	ஆணி	ஆணி
அப்பம்	அபூப	ஆம்	ஆம்

பட்டியல்-2.

தமிழ்	சமசு(வ. மொழி)
அப்பளம்	பர்ப்பட
அம்பரம்(உயர்ச்சி, வானம்)	அம்பர
அம்பு	அம்பு
அம்மை	அம்பா
அமைச்சன்	அமாத்ய
அயர்(தளர்,கொண்டாடு)	ஹய்
அரக்கு	ராக்ஷா
அரங்கம்	ரங்க
அரசன்	ராஜன்
அரணம்(காப்பு)	சரணம்
அரணம்(காவற்காடு)	அரண்ய
அரத்தகம்(செம்பஞ்சுக்குழம்பு)	அலக்தக
அரத்தம்(குருதி)	ரக்த
இடைகழி(நடை)	தேஹலி(லீ)
இராகு	ராஹு
இலக்கு (குறி)	லக்ஷ்
இலக்கம்	லக்ஷ
இலக்கணம்	லக்ஷண
ஈயம்	ஸீச
உள்	உஷ்ணம்
உத்தரம்(முகடு)	உத்தர

தமிழ்	சமசு(வ.மொழி)
ஆம்(நீர்)	ஆப்(அப்)
ஆயம் (உரிமை)	ஆய
ஆயிரம்	ஸகஸ்ர
ஆர் / ஆரம் (பொருந்துதல்)	ஆர
ஆர்ப்பாட்டம்	ஆரபாட்ட
ஆரம்(மாலை)	ஹார
ஆலாத்தி	ஆரத்தி
ஆவணம் (அங்காடி)	ஆபண
ஆவணம் (ஒப்பந்தம்)	ஆபண
ஆளத்தி (பாடல்)	ஆலப்தி
இகம்(இவ்வுலகம்)	இஹ
இசி(சிரிப்பு)	ஹஸ்
இஞ்சிவேர்	ச்ருங்கவேர
இட்டி(கைவாள்)	யஷ்டி
இட்டிகை(சிறிது) (செங்கல்)	இஷ்டகா
இடைகலை	இடாகலா
உகு(சிந்து)	உக்ஷ்
உகை(செலுத்து)	அஜ்
உச்சம்(உச்சி)	உச்ச
உடுக்கு	ஹுடுக்க
உண்ணம் (வெப்பம்)	உஷ்ணம்
உத்தி	யுக்தி
உதடு	ஒஷ்ட

(பாவாணர் : வடமொழி வரலாறு)

(தொடரும்)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.